ஜெயம்கொண்டம் தொகுதியில் பனைபொருள் உற்பத்தி நிலையம் அமைத்தல்.

34—(*வினா எண். 11329) டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் பனைபொருள் உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

பேரூர் தொகுதி எட்டிமடையில் 'அம்பர் ராட்டை' தொழிலகம் அமைத்தல்.

35.—(*வினா எண். 11732) திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி எட்டிமடை கிராமத்தில் 'அம்பர் ராட்டை' தொழிலகம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆ. நடராசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் கிராமத்தில் அம்பர் ராட்டைத் தொழிலகம் வேண்டுமென்று கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் பொதுமக்கள் அங்கே கோரிக்கை எழுப்பியிருக்கிறார்கள். அதைத் துவக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கிராம நூற்பு நிலையங்கள் 591 கிராமங்களில் செயற்பட்டு வருகின்றன. இதன்மூலமாக வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. பல கிராமங்களில் குறிப்பாக பெண்கள் இந்தப் பணியிலே ஈடுபட்டு அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். எட்டிமடை என்ற கிராமத்தில் அப்படி

1987 மார்ச் 3]

ஒரு நூற்பாலை வேண்டுமென்று கேட்டு மனுக்கள் வந்திருக்கின்றன. அந்தக் கிராமத்தில் உள்ள எவ்வளவு பெண்கள் இந்தத் தொழிலுக்கு வரத் தயாராக இருக்கிறார்கள் என்று உரிய அதிகாரிகள் கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆய்வு முடிந்ததற்குப் பின் அங்கு ஆரம்பிப்பதற்கு வழிவகை செய்யப்படும்.

திரு. க. சோலைராசு : தலைவர் அவர்களே, காலையிலிருந்து மாலை வரை உழைத்து, ரூ. 9-லிருந்து 12 வரை கூட வருமானத்தை பெற்றுக் கொடுக்கிற அந்த அற்புதமான திட்டத்தைத் தொடங்குகின்றபோதே, இந்தக் கூடங்களைக் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா? கூடங்களைக் கட்ட முடியாமல் இருக்கின்ற சூழ்நிலையில் தொடங்கப்படுகின்ற அந்தத் தேதியிலிருந்து வாடகைக் கட்டிடங்களுக்கு முறையான வாடகை கொடுப்பதற்கு உடனடி நடவடிக்கையை அரசு எடுக்குமா? அல்லது வங்கிக் கடன் மூலம் கூடங்களைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–50)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது துவக்கப்படுகின்ற இடங்களில் வாடகைக்கு இடங்கள் பிடிக்கப்பட்டு உரிய வாடகை வழங்கப் பட்டுதான் நடத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலான இடங்களில் ஆதிதிராவிடநலத்துறை மூலமாக இதற்குத் தேவையான கட்டிடங்கள் கட்டித்தரப்பட்டு அவை செயல்படுத்தப் படுகின்றன. படிப்படியாக சொந்தக் கட்டிடங்களிலே செயல் படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, அம்பர் ராட்டை தொழிலகம் பல கிராமங்களில் இயங்காமல் இருக்கிறது. காரணம் என்னவென்று கேட்டால் அம்பர் ராட்டை தொழிலகத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு பயிற்சியாளர்கள் நியமிக்காமல் மூடிக்கிடக்கிறது என்று தெரிகிறது. ஆகவே, பயிற்சியாளர்களை அதிகமாக நியமித்து மூடிக் கிடக்கின்ற தொழிலகங்களைத் திறக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி அளிப்பதற்கானவர்கள் இருக்கிறார்கள். பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆனால் பொதுவாக கிராமங்களில் அறுவடை நேரங்களில் அந்த நூற்பு நிலையங்களுக்கு ஆட்கள் வருவதில்லை. ஆகவேதான் அவைகள் மூடிக்கிடக்கின்றனவே தவிர வேறு காரணங்களினால் அல்ல.